முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1640

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.03.2024**, செவ்வாய்கிழமை

1. அறம் கூட்டி இந்த பேருலகம் தன்னில்
ஆன்மீக ஞான தனிவழி காட்டி
வரம் தந்து கலியுக மக்களுக்கு
வாழும் காலமே தன்னிலை அறிய அருள் செய்யும்
2. அருள் செய்யும் ஆறுமுக அரங்கனே
அப்பனே ஞான தேசிகனே
வரம் தந்து உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 13 ம் நாள், 26.03.2024, செவ்வாய்கிழமை)

3. ஆசிதனை அரங்கன் சக்தி கூடிடவும்
அரங்கன் மார்க்கம் உலகமெங்கும் நிரம்பி
வரமாக எங்கும் தர்ம ஞான மகாசக்தி
வல்லமை கூடி உலகோர்க்கு வழிகாட்டிடவும்
4. வழிகாட்டிடவும் ஆறுமுகப்பெருமான் யான்
வரமாக இன்று அரங்கனுக்கு சக்தி பெருக்குகின்றேன்
ஆகவே உலகோர் அரங்கன் திருவடி பற்றி
ஆன்மீக ஞான வழிகளில் தேறி
5. மிகைபட அன்னதான சேவையை
முன்னின்று பல்வேறு தடங்களிலும் நடத்தி
நடத்தி அரங்கா முருகா என
நாளும் ஜெபதபங்கள் கூட்டிவர
6. இடரின்றி இந்த பேருலகம்
எல்லா வகையிலும் பாதுகாப்புக் கூடி
கூடியே அரங்கன் மார்க்கம் வழி
குறைவில்லாத சன்மார்க்க நெறிவழியே

7. ஈடேறும் ஞான யுகமாற்றமாக
இனிதே ஆறுமுகன் என் ஆசிபெற்ற
பெற்ற நல் ஞான ஆட்சிக் காலமதும்
பிசகின்றி அரங்கன் வழிகாட்டலில் அரங்கேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—